## வணிகவரி மற்றும் பதிவுத் துறை

## மக்கள் சாசனம்

## வணிகவரிகள்

## 2006 –2007

### நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள்

வணிகவரித் துறையின் கீழ்க்கண்ட நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை வெளிப்படுத்தும் நோக்கில் இந் ந மக்கள் சாசனம் அமைகிறது,

- வணிகவரிச் சட்டங்கள் விதிமுறைகள் மற்றும் அவை சார்ந்த வழிமுறைகளை செம்மையாகச் செயல்படுத்துதல்

- வரி வருவாய் வசூலை அதிகரிப்பதன் வாயிலாகப் பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்தும் அரசின் முயற்சிக்கு உறுதுணையாக விளங்குதல்,

- வணிகர்கள் மற்றும் வரி செலுத்தும் நுகர்வோர், வணிகம் மற்றும் தொழில் முனைவோருக்கு தரமுள்ள சேவை வழங்குதல்

### வழிவகைகள்

மேற்கண்ட நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு இத்துறை கீழ்க்கண்ட வழிவகைகளை மேற்கொள்ள முயற்சிக்கும்.

- வெளிப்படையான நிருவாகம்
- காலந்தவறாமை மற்றும் திறமையான செயல்பாடு
- மரியாதை மற்றும் புரிதலுடன் கூடிய நல்லிணக்கம்
- நேர்மையுடன் நீதி வழுவாமை
- பொறுப்பு மற்றும் நம்பகத் தன்மை

## வணிகர்களிடமிருந்து எதிர்பார்ப்புகள்

வணிகவரித்துறையின் சிறப்பான பணி மற்றும் நிருவாகம் வணிகர்களின் ஒத்துழைப்பை சார்ந்துள்ளது. எனவே, கீழ்க்கண்டவற்றை வணிகர்களிடமிருந்து இத்துறை எதிர்பார்க்கின்றது.–

- வணிகங்களைப் பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தலை உரியகாலத்தே செய்தல்.
- கணக்குகளை முறையாகப் பேணுதல் மற்றும் சமர்ப்பித்தல்
- அரசு அளிக்கும் சலுகைகளை பயன்படுத்தி விற்பனை விவரப் படிவங்களைக் குறித்த நாளில் தாக்கல் செய்தல்
- வசூலித்த வரிகளை குறித்த காலத்தில் அரசுக்கு செலுத்துதல்
- வரிச் சட்டங்களை முழுமையாக கடைபிடித்தல்



## மேற்குறிப்பிட்டுள்ள வழிவகைகள் மற்றும் எதிர்பார்ப்புகளின் பெருமுயற்சியாக இத்துறையால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்

- படிவங்களுக்கு ஒப்புகை செய்தல், தெரிவிப்புகள், விண்ணப்பங்கள், வரி விதிப்பு விவர அறிக்கை மற்றும் அனைத்து கடிதங்களும் கிடைக்கப் பெற்ற உடன் அல்லது அதிகபட்சமாக ஏழு நாட்களுக்குள் ஒப்புகை அளிக்கப்படும்.
- கடிதங்கள் கிடைக்கப் பெற்ற 30 வேலை நாட்களுக்குள் அவற்றின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.
- தவிர்க்க முடியாத காரணங்களினால், முடிவு எடுப்பதில் தாமதம் ஏற்படின் இடைக்கால பதில் அளிக்கப்படும்.
- திருப்பித் தர வேண்டிய தொகைகளை, கோரிக்கை ஏற்கத் தக்கதாக இருந்தால், கோரிக்கை கிடைக்கப் பெற்ற 90 நாட்களுக்குள் வழங்கப்படும்.
- நிறுத்தி வைக்கப்பட்ட சரக்குகளை, அதற்குரிய கோரிக்கைகள், சரியாக மற்றும் முழுமையாக கிடைக்கப் பெறின், அவைகள் உடனடியாக விடுவிக்கப்படும்.

- இறுதியான வரிவிதிப்பிற்காக சமர்ப்பிக்கப்படும் கணக்குகளை, காலதாமதமின்றி சரிபார்க்கப்படும்.

**இத்துறை, மேலும் கீழ்க்கண்டவற்றை உறுதி செய்ய முயற்சிக்கும்.**

- வணிகர்களுடன் தொடர்புடைய அனைத்து அலுவலர்களும் அடையாள அட்டை வைத்திருப்பார்கள்.
- பெறப்படும் தனிப்பட்ட மற்றும் வணிகம் தொடர்பான தகவல்கள் ரகசியமாகப் பேணப்படும்.
- சரக்குகள் நிறுத்தி வைக்க நேரிடின் அதற்குரிய காரணங்களை விளக்கிய பின்னரே, அந்நடிவக்கை மேற்கொள்ளப்படும். (இறுதி ஆணை பிறப்பிக்கப்படும் முன்னர், முழுமையான வாய்ப்பு அளிக்கப்படும்)
- வியாபாரத் தலங்கள், அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர்களின் அனுமதி பெற்ற பின்னரே ஆய்வு செய்யப்படும்.
- மேல்முறையீடு பற்றிய வழிமுறைகள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் குறித்த முழுத் தகவல்கள் யாவும், அவற்றை கேட்போர்க்கு வழங்கப்படும்.



- கொள்கை மற்றும் வழிமுறைகள் குறித்து ஆய்வு செய்யும்பொழுது, தொழில் மற்றும் வணிக சங்கங்கள் மற்றும் நுகர்வோர் ஆகியோருடன் கலந்து ஆலோசிக்கப்படும்.
- தேவையான தகவல்கள் மற்றும் வழிமுறை பற்றிய விபரங்களை சென்னை சேப்பாக்கம், வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் உள்ள இணை ஆணையர் (பொது மக்கள் தொடர்பு) அவர்களை அணுகினால் உடனடியாக வழங்குவார்.
- சட்டம் மற்றும் வழிமுறைகள் குறித்த அனைத்து மாற்றங்களும் அவ்வப்போது விளம்பரப்படுத்தப்படும்.

**தரமான சேவை வழங்குவதை நோக்கி**

- வணிகர்கள் விண்ணப்பம் தாக்கல் செய்த 30 நாட்களுக்குள் பதிவுச் சான்றிதழ் பெற்றுக் கொள்ள உரிமை உண்டு.
- வழங்கப்பட்ட பதிவுச் சான்றுகள் அந்த நிதியாண்டிற்கே செல்லுபடியாகும். தகுதிக்கேற்ப, அச்சான்றிதழினை, ஆண்டுக்கு ஒரு முறையோ, ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறையோ, புதுப்பித்துக் கொள்ளலாம்.

- வணிகர் நல வாரியம், வாரிய உறுப்பினர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினருக்கு, மருத்துவச் சிகிச்சை, படிப்பு வசதி போன்றவற்றிற்கு நிதி உதவி வழங்கும் நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- வணிகவரித்துறை சார்ந்த பதிவு செய்தல், வரி செலுத்துதல் மற்றும் பொருட்கள் மீதான அமலிலுள்ள வரி விகிதங்கள்ஆகியவை குறித்த பொது விபரங்கள் www.tnsalestax.com என்ற வலை தளத்தின் மூலமாகக் கிடைக்கும்.

- வரிவிகிதம் குறித்தான தெளிவுரைகள் கோரி விண்ணப்பித்தால் வணிகவரி ஆணையர் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959 பிரிவு 28–ஏ ன் கீழ் கூடியவரை விரைவில் விளக்கமளிப்பார். தவிர்க்க முடியாத காரணங்களினால், தெளிவுரை வழங்குவதில் காலதாமதம் எற்படின், வணிகவரி ஆணையர் இடைக்கால பதில் ஒன்றை அனுப்புவார்.

- புகார்கள் மற்றும் குறைகள் குறித்து வணிகர்களும், பொது மக்களும், சென்னை, சேப்பாக்கம், வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் உள்ள இணை ஆணையர் (நிர்வாகம்) அவர்களின் தலைமையில் இயங்கும் குறைதீர்க்கும் பிரிவிற்கு மனு செய்யலாம்.

- மேலும், புகார்கள், குறைகள், வரி ஏய்ப்பு பற்றிய விவரம் மற்றும் பொதுமக்களின் ஆலோசனை



ஆகியவற்றை நேரடியாக வணிகவரி ஆணையரிடம் தெரிவிக்க ஏதுவாக "தகவல் பரிமாற்றக் குரல் பதிவு செய்யும் கருவி" வணிகவரி ஆணையர் அவர்கள் அறையில் பொருத்தப்பட்டுள்ளது. இதற்கான நேரடி தொலைபேசி இணைப்பு எண் 044–28520535 ஆகும்.

- அரசுச் செயலர் (வணிகவரிகள்), அரசுச் செயலர் (நிதி) மற்றும் ஆணையர் (வணிகவரிகள்) ஆகியோர் கொண்ட சிறப்புக் குழு தமிழ்நாடு விற்பனை வரி சட்டப்பிரிவு 16 (D)–ன்கீழ் அமைக்கப்பட்டு வணிகர் மேல்முறையீடு செய்யத் தவறிய இனங்களிலும் இயற்கை நீதி முறை மற்றும் சட்டப்பிரிவுகளுக்கு எதிரானவையாக உள்ள வரிவிதிப்பு ஆணைகள் முதலியவற்றை பரிசீலித்து நிவாரணம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- தகவல் அறியும் உரிமைச் சட்டம் இத்துறையில் அமுலாக்கப்பட்டு அதனுடைய அமலாக்கம் துறையில் உயர்மட்ட அளவில் கண்காணிக்கப்படுகிறது.

## வணிகர் நலம் பேணுதல்

- வணிகர்கள் மற்றும் அவர்தம் குடும்பங்கள் நலம் காக்கும் பொருட்டு வணிகர் நல வாரியம் மூலமாக பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. வணிகர் நல வாரியம் மூலமாக வழங்கப்படும் நலத்திட்ட

உதவிகள் 2005–2006–ஆம் ஆண்டு வரை பின்வருமாறு :

| திட்டத்தின் பெயர் | 31.3.2006 முடிய | |
|---|---|---|
| | வழங்கப்பட்ட தொகை ரூபாய் | பயன் பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை |
| 1. குடும்ப உதவித் திட்டம் | 70,55,000 | 279 |
| 2. மருத்துவ உதவித் திட்டம் (சிறு நீரகம்/இருதய அறுவை சிகிச்சை) | 7,36,000 | 33 |
| 3. கல்வி உதவித் திட்டம் | 1,98,000 | 77 |
| 4. விளையாட்டுக்கான ஊக்கத் தொகை | 15,000 | 2 |
| 5. திருமண உதவித் திட்டம் | 10,000 | 2 |
| 6. தீ விபத்து நிவாரணம் | 1,45,000 | 29 |
| 7. ஊனமுற்றவருக்கான உதவித் திட்டம் | 15,000 | 2 |
| 8. மாணவர் மதிப்பெண் ஊக்கத் திட்டம் | 20,000 | 6 |
| மொத்தம் | **81,94,000** | **430** |

31.3.2001 வரை வணிகர் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 38,971 மற்றும் அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட உறுப்பினர் கட்டணம் ரூ.65.81 லட்சம் ஆகும். 31.3.2006 வரை



வணிகர் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 42,663 மற்றும் அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட உறுப்பினர் கட்டணம் ரூ.78.82 லட்சம் ஆகும்.

மேலும் வணிகர் நல வாரியத்தில் உள்ள குறைகள் களையப்பட்டு வணிகர் நலம் பேண, நலத்திட்ட உதவிகளை மேம்படுத்துதற்குரிய வழிவகைகள் ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

## முடிவுரை

இத்துறை, சட்ட விதிமுறைகளை ஏற்று செயல்படும் வணிகர்களை கண்டறிந்து அவர்களை ஊக்குவித்து அவ்வாறு அல்லாதவர்களை நெறிப்படுத்த கடுமையான நடவடிக்கை எடுக்கும். இத்துறையும், வணிகர்களும் ஒருவருக்கொருவர் கூட்டாக இணைவதன் மூலம், மாநிலத்தின் வளர்ச்சியில் சிறப்பாக பங்கேற்க இயலும் என நம்பப்படுகிறது.

**சி.நா.மீ. உபயதுல்லா**
வணிகவரித்துறை அமைச்சர்.